**ஜூன் 23**

**மனன வசனம்**

**மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும். மத்தேயு 24:27.**

**ஆராய்ச்சிக்கு**

*ஏசா 13:6,9; மத்தேயு 24:30,31; தானி 2:34,35; 2தீமோ 4:6-8; 2தெச 1:7-10.*

ஜூன் 23 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

## பாடம் 13

# நம் ஆண்டவராகிய இயேசுவின் வருகை



கவிஞரான டி. எஸ். எலியட் ஒரு கவிதையில், 'என்னுடைய துவக்கத்தில்தான் என்னுடைய முடிவு இருக்கிறது' என்று ஆரம்பித்திருப்பார். சுருக்கமான வரிகள்தாம்; ஆனால் அழுத்தமான உண்மை. துவக்கத்தில்தான் முடிவுகளும் காணப்படுகின்றன. செவந்-டே அட்வென்ட்டிஸ்ட் என்கிற பெயரும்கூட இந்த உண்மையைப் பிரதிபலிக்கிறது. இரண்டு அடிப்படை வேதாகமப் போதனைகள் இந்தப் பெயரில் உள்ளது. 'செவந்த் -டே' என்பது நான்காம் கற்பனை கூறுகிற ஏழாம் நாள்; உலகம் ஆறு நாட்களில் சிருஷ்டிக்கப்பட்டது என்பதை வாராவாரம் நினைவுப்படுத்துகிற ஒரு சின்னம். 'அட்வென்ட்டிஸ்ட்' என்பது இயேசுவின் இரண்டாம் வருகையைச் சுட்டிக்காட்டுகிறது. நித்திய வாழ்க்கைபற்றிய வாக்குறுதி உட்பட வேதாகமத்தின் அனைத்து வாக்குறுதிகளும் எதிர்பார்ப்புகளும் அன்று தான் நிறைவேறப்போகின்றன.

நமது ஆரம்பமாகிய உலகச் சிருஷ்டிப்புக்கும், நமது முடிவு அல்லது நம் பாவ வாழ்க்கையின் முடிவாகியஇரண்டாம்வருகைக்குமிடையேகாலஇடைவெளி எவ்வளவு பெரிதாகஇருந்தாலும், ஆரம்பமும் முடிவும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. நம்மைச் சிருஷ்டித்த அதே தேவன்தாம் திரும்ப வரப்போகிறார்; யோவான் 1:1-3. கணப்பொழுதில், 'கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு இமைப்பொழுதிலே' இறுதியாக நம்மை மீட்டுக்கொள்ளப்போகிறார். 1கொரி 15:52. எனவே, நம் ஆரம்பத்தில்தான் நம் முடிவும் இருக்கிறது.

நாம் வாழ்கிற இந்த உலகத்தை பொறுத்த வரை எல்லா நிகழ்வுகளுக்கும் இறுதி நிகழ்வான நம் இரண்டாம் வருகைபற்றி இந்த வாரம் பார்ப்போம்.

*2018, ஜூன் 30 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

ஞாயிறு, ஜூன் 24

## கர்த்தருடைய நாள்

இயேசுவின் இரண்டாம் வருகைபற்றி புதிய ஏற்பாடு மட்டும்தான் போதிக்கிறதென்று சிலர் நினைக்கிறார்கள்; இது உண்மையல்ல. இயேசு முதலாம் முறை வந்து, மரித்து, உயிர்த்தெழுந்து, பரலோகம் சென்ற பிறகுதான் இரண்டாம் வருகை சம்பந்தப்பட்ட உண்மை தெளிவாக வெளிப்பட்டது என் பதை மறுக்கமுடியாது. ஆனால், புதிய ஏற்பாடு இந்த வருகைபற்றி எவ்வளவு சொல்கிறதோ, அவ்வளவுக்கு பழைய ஏற்பாடும் வெகு காலத்திற்கு முன்னரே இந்த முக்கிய உண்மையை அடையாளங்களாகச் சுட்டிக்காட்டுகிறது. இயேசு வின் இரண்டாம் வருகைபற்றி புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் புதிதாக எதை யும் வெளிப்படுத்தவில்லை; பழைய ஏற்பாட்டில் ஏற்கனவே வெளிப்பட்டிருந்த ஒரு சத்தியத்தை அதிகம் வலியுறுத்தினார்கள். இரட்சகர் சிலுவையில் அறையப்பட்டு, உயிர்த்தெழுந்த பிறகுதான், இரண்டாம் வருகைகுறித்த வாக்குறுதியை முற்றிலுமாகப் புரிந்துகொள்ள முடிந்தது.

**ஏசாயா 13:6,9; சகரியா 14:9; தானியேல் 12:1 ஆகிய வசனங்கள் இயேசுவின் இரண்டாம் வருகைபற்றி போதிப்பது என்ன?**

‘கர்த்தருடைய நாளானது’ துன்மார்க்கருக்கு அழிவும் துக்கமும் அமளி யுமான ஒரு நாளாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் தேவ பிள்ளைகள் அனைவருக்கும், ‘புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப் படுகிற’ அனைவருக்கும் இது விடுதலையின் நாள். பிலி 4:3; வெளி 3:5; 13:8. ‘கர்த்தருடை நாளானது’ துன்மார்க்கருக்குத் தண்டனைத் தீர்ப்பையும், தேவ னுக்கு உண்மையாக இருப்பவர்களுக்கு பாதுகாப்பையும் வழங்கப்போகிற ஒரு நாளென்பதை முதலில் பழைய ஏற்பாடுதான் சொல்கிறது. உதாரணமாக, ‘கர்த்தருடைய உக்கிரக்கோபத்திற்கு’ சிலர் ஆளாகிறார்கள்; ஆனாலும், ‘நீதி யைத் தேடுங்கள்’ ‘மனத்தாழ்மையைத் தேடுங்கள்’ என்கிற அழைப்புக்குச் செவி கொடுப்பவர்கள் ‘கர்த்தருடைய கோபத்தின்நாளிலே மறைக்கப்படுவார்கள்.’ செப் 2:1-3.

**இயேசுவின் இரண்டாம் வருகையின்போது துன்மார்க்கரும் இரட்சிக்கப் பட்டோரும் தனித்தனியே இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுவார்கள் என்பதை மத் 24:30,31 வசனங்கள் எவ்விதத்தில் சுட்டிக்காட்டுகின்றன?**

கடைசிக்கால நிகழ்வுகள் அரங்கேறும் சமயத்தில், நாம் எந்தப் பக்கத்தில் இருக்கிறோம் என்பது தெளிவாகப் புலப்படும். சரியான பக்கத்தில் நாம் இருப்பதற்கு இப்போதே என்ன தீர்மானங்களைச் செய்யவேண்டும்?

திங்கள், ஜூன் 25

## தானியேலும் இயேசுவின் இரண்டாம் வருகையும்

இயேசுவின் காலத்திலிருந்த யூதர்கள் பலர், மேசியா வந்து, ரோமர்களைத் தோற்கடித்து, அனைத்துத் தேசங்களிலும் இஸ்ரவேலை அதிகாரமிக்கதாக ஸ்தாபிப்பார் என்று நினைத்தார்கள்; ஆனால் இயேசுவின் முதலாம் வருகையின் நோக்கமும் இரண்டாம் வருகையின் நோக்கமும் அதுவல்ல. மாறாக, பாவம் செய்து விழுந்துபோன இவ்வுலகை ஆங்காங்கே ஒட்டுப்போட்டு சரிசெய் வதைவிட, தம் மக்களுக்காக மேலான ஒரு நோக்கத்தை தேவன் வைத்திருந்தார். இந்தப் பழைய பூமியைச் சரிசெய்து புதிய பூமி உருவாக்கப்படப்போவதில்லை; புதிய பூமி முற்றிலும் புதிதாகப் படைக்கப்பட்டதாக இருக்கும். பழைய ஏற் பாட்டிலேயே தானி 2ஆம் அதிகாரம்தான் இந்த உண்மையை மிகத்தெளிவாக வெளிப்படுத்துகிறது.

பாபிலோன், மேதிய-பெர்சியா, கிரேக்கம், இறுதியாக ரோம் ஆகிய உலகின் நான்கு பெரும் சாம்ராஜ்யங்களின் எழுச்சியையும் வீழ்ச்சியையும்பற்றி தானியேல் 2 கூறுகிறது; ரோம சாம்ராஜ்யமானது உடைந்து, இன்றைய ஐரோப் பிய நாடுகள் உருவாயின. இந்த நான்கு பெரும் சாம்ராஜ்யங்களும் ஒன்றன்பின் ஒன்றாக வரவிருந்ததுபற்றி நேபுகாத்நேச்சார் தம் கனவில் கண்டார்; ஆனால் கனவின் முடிவு பிரமிப்பூட்டுவதாக இருந்தது. இந்த உலகத்திற்கும், நம் ஆண்ட வராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்குப்பிறகு வரவிருக்கும் உலகத்திற்கும் ஒப்பீடே கிடையாது என்பதை வலியுறுத்தவே அந்தக் காட்சியைத் தந்தார்.

**இந்த உலகத்தின் கதியையும், புதிய பூமியின் தன்மையையும்பற்றி தானி 2:34, 35,44,45 ஆகிய வசனங்கள் என்ன சொல்கின்றன?**

---

இயேசு வரும்போது என்ன நிகழும் என்பதை இந்த வசனங்கள் சிறிதும் சந்தேகத்திற்கு இடமின்றி சொல்கின்றன. தாமே அந்தக் கல் என்று லூக்கா 20:17,18இல் இயேசு கூறினார்; இந்தப் பூமியில் எஞ்சியிருந்த அனைத்தையும் இந்தக் கல் நொறுக்கி நிர்மூலமாக்கியது. இந்தக் கல் பொன்னையும், வெள்ளி யையும், களிமண்ணையும், இரும்பையும், வெண்கலத்தையும் நொறுக்கியபிறகு அவை, ‘ கோடைகாலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்துபோகிற பதரைப்போலாயிற்று; அவைகளுக்கு ஒரு இடமும் கிடையாதபடி காற்று அவை களை அடித்துக் கொண்டுபோயிற்று’ என்று தானி 2:35 கூறுகிறது. அதாவது, இயேசு இவ்வுலகத்திற்கு வந்தபிறகு, இங்குள்ள எதுவுமே மிஞ்சியிருக்காது.

இந்த உலகத்தில் ஒரு துரும்பும் காணாதபடி அழித்த கல்லானது ‘ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று.’ இரண்டாம் வருகையின் போது எழும்புகிற இந்த ராஜ்யமானது ‘என்றென்றைக்கும் நிற்கும்.’ தானி 2:44.

அதாவது, இந்தப் பூமியில் வாழ்ந்து, மரிக்கிற ஒவ்வொருவருமே இரண் டில் ஒரு முடிவைச் சந்தித்தாக வேண்டும். ஒன்று நாம் நித்தியகாலமாக இயேசு வோடு இருப்போம், அல்லது இந்தப் பழைய உலகின் பதரோடு சேர்ந்து ஒன்று மில்லாமல் மறைந்துபோவோம். இந்த இரண்டில் ஏதோ ஒரு முடிவை நித்திய மாக நாம் சந்திக்கப்போகிறோம்.

## நீண்ட கால வாய்ப்புகள்

**நம்முடைய மிகப்பெரிய எதிர்பார்ப்பு என்ன? ஏன்? தீத்து 2:13.**

இப்பிரபஞ்சம் உருவான விதம்பற்றி பேராசிரியர் ஒருவர் பின்வருமாறு சொன்னார். அதாவது 1300 கோடி வருடங்களுக்குமுன்னர் 'சொல்லமுடியாத அளவுக்கு அடர்த்தியான மிகச்சிறிய திரட்சி ஒன்று, ஒன்றுமில்லாமையிலிருந்து திடீரென வெளியே வந்து, வெடித்துச் சிதறியது. அந்த வெடிப்பிலிருந்துதான் நம்முடைய பிரபஞ்சம் உருவாயிற்று.' ஆனால் இந்த 'சொல்லமுடியாத அளவுக்கு அடர்த்தியான மிகச்சிறிய திரட்சி' ஒன்றுமில்லாமையிலிருந்து எவ்வாறு வெளியே வந்தது என்று அவர் சொல்லவில்லை. அப்படி நடந்ததாக விசுவாசித்து, ஊகித்துக்கொண்டார்.

நம்முடைய ஆரம்பத்தில்தான் நம்முடைய முடிவும் இருக்கிறது என்று இந்த வாரப்பாடத்தின் துவக்கத்தில் பார்த்தோம். நம்முடைய முடிவு நம்பிக்கை தரக்கூடியதாக இருக்காதென்று இந்தப் பேராசிரியர் கூறுகிறார். 'சொல்ல முடியாத அளவுக்கு அடர்த்தியான மிகச்சிறிய திரட்சியிலிருந்து' உருவான இந்தப் பூமியும் அதிலுள்ளவைகளும் மனிதர்களும் அதேபோல கடைசியில் ஒன்றுமில்லாமல் போய் விடுவார்களாம்.

மாறாக, நம்முடைய தோற்றம்பற்றி இதைவிட பகுத்தறிவுள்ள காரணத்தை வேதாகமம் சொல்கிறது; மிகுந்த நம்பிக்கைதரும் காரணமாக அது இருக்கிறது. உருவாக்குகிற தேவனுக்குஸ்தோத்திரம். நம்முடைய நீண்டகால எதிர்பார்ப்புகள் மகிழ்ச்சியளிப்பவையாக இருக்கின்றன. எதிர்காலம் குறித்து நாம் அதிக நம்பிக்கையுள்ளவர்களாகஇருக்கலாம்; இயேசுவின் இரண்டாம் வருகைபற்றிய வாக்குறுதியைத்தான் இந்த நம்பிக்கை சார்ந்துள்ளது.

**2தீமோ 4:6–8இல் பவுல் என்ன சொல்கிறார்? எதன்மேல் அவருடைய நம்பிக்கை இருந்தது?**

பவுல் சீக்கிரம் கொல்லப்படவிருந்தார்; ஆனாலும் இரட்சிப்பின் நிச்சயத்தோடும் கிறிஸ்துவின் வருகைகுறித்த நம்பிக்கையோடும் காணப்பட்டார்; அதை 'அவர் பிரசன்னமாகுதல்' என்று அழைக்கிறார். 2தீமோ 4:8. தமது சுய நீதியை நம்பி அல்ல, இயேசுவின் நீதியை நம்பி, இயேசுவின் இரண்டாம் வருகை குறித்த வாக்குறுதியில் நம்பிக்கை வைத்திருந்தார்; 1தீமோ 1:15. அதனால்தான் 'நீதியின் கிரீடம்' தனக்குக் காத்திருக்கிறது என்கிறார். அப்போதைய சூழ்நிலையில், மரணதண்டனையை எதிர்பார்த்து சிறைச்சாலையில் இருந்தாலும், தம்முடைய நீண்டகால எதிர்பார்ப்புகள் மேலானவை என்பதை பவுல் அறிந்திருந்தார். அப்போதிருந்த சூழ்நிலையைப் பாராமல், பரந்த ஒரு காட்சியை மனதில் வைத்திருந்ததே அதற்கு காரணம்.

இப்போதைக்கு உங்களுடைய சூழ்நிலைகள் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்; ஆனால் பவுலிடம் காணப்பட்ட அதே நம்பிக்கை எவ்வாறு உங்களிடமும் காணப்படமுடியும்? மேலான காட்சியையும், அதில் நமக்குள்ள நம்பிக்கையையும் காண நாம் என்ன செய்யலாம்?

## வானத்தின் மேகங்கள்மேல்

வேதாகமத்தின் மையக் கருத்தாக, முக்கியக் கருத்தாக இரண்டாம் வருகை இருக்கிறது; ஆனாலும், இயேசு உண்மையிலேயே நேரடியாக வரப்போகிறார் என்பதை எல்லாக் கிறிஸ்தவர்களும் நம்புவதில்லை. உதாரணமாக, இயேசு நேரடியாக வரப்போவதில்லை. மாறாக, பூமியில் தம்முடைய சபையில் அவர் தமது ஆவியை வெளிப்படச்செய்வதே அவருடைய வருகை என்கிறார்கள். அதாவது, கிறிஸ்தவ மார்க்கத்தின் ஒழுக்க நியதிகளை மக்கள் கடைபிடிக்கும் போது கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நிறைவேறுகிறதாம். இது ஒரு பொய்யான போதனை என்பதில் நாம் சந்தோஷப்படலாம். இது உண்மையாக இருக்குமானால், நீண்டகால நம்பிக்கை ஏதாவது நமக்கு இருக்கமுடியுமா?

**இரண்டாம் வருகைபற்றிக் கூறும் புதிய ஏற்பாட்டு வசனங்கள் கீழே உள்ளன. கிறிஸ்துவின் வருகை எப்படிப்பட்டதாக இருக்குமென இவை கூறுகின்றன?**

*மத்தேயு 24:30* ______________________________

*1தெச 4:16* ______________________________

*மத்தேயு 26:64* ______________________________

*வெளி 1:7* ______________________________

*2 தெச 1:7-10* ______________________________

‘‘ஆகாயம் திறந்து மூடுவதுபோலத் தெரிந்தது. தேவ சிங்காசனத்திலிருந்து மகிமை பளிச்சிட்டதுபோல் தெரிந்தது. காற்றில் அசையும் நாணப்போல மலைகள் அதிர்ந்தன; பாறைகள் துண்டுதுண்டாகி எங்கும் சிதறின. பெரும் புயல் வருவதுபோன்ற பெரும் சத்தம் கேட்டது. கடல் கடுமையாகக் கொந்தளித்தது. அழிவு வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் பிசாசுகள் கத்துவதுபோல் சூறாவளிக் காற்றின் ஒலி கேட்டது. கடலின் அலைகள்போல பூமி ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. அதன் மேற்பரப்பு உடைந்துகொண்டிருந்தது. அதன் ஆதாரங்கள் நிலைகுலைந்துக் காணப்பட்டன. மலைத்தொடர்கள் மூழ்கின. மனிதர் வாழும் தீவுகள் மறைந்தன. துன்மார்க்கத்தினால் அழிந்த சோதோமைப்போல துறைமுகப்பட்டணங்கள் கொந்தளிப்பான தண்ணீரால் அழிந்தன. ‘தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரம்’ மகா பாபிலோனுக்கு கொடுக்கப்படுமென்பதை தேவன் நினைவுகூர்ந்தார். – *EGW, GC, p 637.*

இயேசுவின் இரண்டாம் வருகை பிரமாண்டமான ஒரு நிகழ்வாக இருக்கப்போகிறது; அது உண்மையிலேயே இந்த உலகத்திற்கு முடிவுகட்டப்போகிறது. இயேசு தம் முதலாம் வருகையில் நமக்காக எவற்றை நிறைவேற்றினார் என்பது அவருடைய இரண்டாம் வருகையில் வெளிப்படும்.

இயேசு உண்மையிலேயே வரப்போகிறார் என்று நம்பினால், அது இப்போது நாம் வாழ்கிற விதத்தில் என்ன தாக்கத்தை உண்டாக்கும்? வாழ்க்கையில் உண்மையிலேயே முக்கியமான விஷயங்களுக்கு நாம் முன்னுரிமையளிக்க, இது எவ்வாறு உதவக்கூடும்?

வியாழன், ஜூன் 28

## ஜீவனுள்ளோரும் மரித்தோரும்

'நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்' என்று இயேசு சொன்னார். யோவான் 11:25. தம் சிநேகதனாகிய லாசருவை உயிர்த்தெழச் செய்வதற்குமுன் இயேசு சொன்ன வார்த்தைகள் இவை. நம்புதற்கரிய இவ்வார்த்தைகளை மக்கள் விசுவாசிக்க வேண்டுமென்று சொன்னதோடு இயேசு நிறுத்திக்கொண்டாரா? இல்லை, மரித்து, நாட்கள் சென்று, நாற்றமெடுக்க ஆரம்பித்திருந்த லாசருவின் சடலத்தை உயிரோடு எழுப்பவும் செய்தார். யோவான் 11:39.

இயேசுவை நம்புகிறவர்களும் மரிக்கிறார்கள். ஆனால், இயேசு சொன்னதுபோல, அவர்கள் மரித்தாலும் மீண்டும் பிழைப்பார்கள். இதுதான் மரித்தோரின்உயிர்த்தெழுதல். இதுதான்நம்எதிர்பார்ப்புகள்எல்லாம்நிறைவேறப்போகிற முக்கிய நாளாக இரண்டாம் வருகையை நோக்கிப்பார்க்கச் செய்கிறது.

**இயேசு திரும்ப வரும்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் என்னவாகிறார்கள் என்று ரோமர் 6:5; 1தெச 4:16; 1கொரி 15:42–44, 53–55 கூறுகின்றன?**

---

---

இரண்டாம் வருகையின் நம்பிக்கை என்னவென்றால், இயேசு மரித்து உயிர்த்தெழுந்ததுபோல, ஒவ்வொரு காலக்கட்டத்திலும் வாழ்ந்து மரித்துப் போன அவருடைய பிள்ளைகள் அனைவரும் உயிரோடு எழும்புவார்கள். அவருடைய உயிர்த்தெழுதலில்தான் தங்களுடைய உயிர்த்தெழுதலுக்கான நிச்சயத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

**இயேசு வரும்போது உயிரோடு இருக்கிறவர்களுக்கு என்ன ஆகும்? பிலி 3:21; 1தெச 4:17.**

---

---

இயேசு வரும்போது உயிரோடு இருக்கிற விசுவாசிகளுக்கு புதிய சரீரம் கிடைக்கும்; அது இப்போதைய சரீரம் போன்றதல்ல; மரித்தோரிலிருந்து எழும்புகிற நீதிமான்களுக்கு அவர் தருகிற அதே அழியாமையுள்ள சரீரத்தைத் தருவார். ''உயிரோடிருக்கும் நீதிமான்கள் 'ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே' மறுரூபமாவார்கள். தேவனுடைய சத்தம் கேட்டவுடன் அவர்கள் மகிமையடைந்தார்கள்; இப்போது அழியாமையுள்ளவர்களாக மாற்றப்பட்டு, உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களோடுகூட கர்த்தரைச் சந்திக்க ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள்.' – *EGW, GC, p 645.*

நித்திய வாழ்க்கையைப் பலிகொடுத்தாலும், இந்த உலகத்தில் நீங்கள் வைத்திருக்க விரும்பும் விஷயங்களை எல்லாம் பட்டியலிடுங்கள். அப்படியொரு பட்டியலைப் போடமுடிந்ததா?

## மேலும் படிக்க:

விழுந்துபோன இவ்வுலகில் மனிதர்கள் பாவத்திலும் உபத்திரவத்திலும் அகப்பட்டுள்ள சோகச் சம்பவத்திற்குப் பிற்சேர்க்கையாக இயேசுவின் இரண்டாம் வருகை அமையவில்லை. மாறாக, இரண்டாம் வருகை ஒரு பிரமாண்டமான முடிவு; கிறிஸ்தவ விசுவாசத்தின் மகத்தான நம்பிக்கை. இதில்லாமல் நமக்கு எதுவுமே இல்லை. ஒரு துயரத்திற்குமேல் அடுத்த துயரம், ஒரு இழப்பிற்குமேல் அடுத்த இழப்பு என எல்லாமே மரணத்தில் முடிவதாகவே நிலைமை மாறியிருக்கும். கிறிஸ்துவின் வருகை நமக்கு நம்பிக்கையைத் தந்திருக்கிறது. வில்லியம் ஷேக்ஸ் பியர், வாழ்க்கை 'ஒரு கட்டுக்கதை. வெறும் வார்த்தையாலும் உக்கிரத்தாலும் ஒரு முட்டாள்சொன்ன கதை. அது ஒன்றுமே இல்லை' என்கிறார். ஆனால் உயிர்த்தெழு தல் உண்டென்று ஆண்டவர் மீண்டும்மீண்டும் வலியுறுத்துகிறார். தம் உயிரைக் கொடுத்து நம்மை மீட்டிருக்கிறார். மாற்கு 10:45. தாம் வாங்கியதைப் பெறுவதற்கு மீண்டும் வருகிறார். வானத்தின் நட்சத்திரங்களோ, மரங்களிலிருக்கும் பறவைகளோ இயேசுவின் வருகையை நமக்கு அறிவிக்கவில்லை. 'எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்' என்று தேவனே சொல்கிறார். 1கொரி 15:52. ஒரு நாளில் நாம் வானத்தை அண்ணாந்து பார்த்து, 'மனுஷகுமாரன் சர்வ வல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும்' காணப் போகிறோம். மாற்கு 14:62. இவை அனைத்தையும் தேவ வார்த்தை சொல்கிறது. அவருடைய வார்த்தை வாக்குரைப்பதால் நிச்சயமாக நம்பலாம்.

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் கிறிஸ்தவ நியதிகள் அனைத்தும் முற்றிலும் வெளிப்படுவதுதான் இயேசுவின் இரண்டாம் வருகை என்று சிலர் நம்புகிறார்கள். இதைக் கேட்பதற்கு இதமாக இருக்கலாம்; ஆனால் முடிவில் இது நமக்கு ஏதாவது நம்பிக்கையைத் தரமுடியுமா? அவர்கள் சொல்வது உண்மையாக இருந்தால் நிலைமை என்னவாகும்?*

2. *ஒன்றுமில்லாமையிலிருந்து பிரபஞ்சம் வந்ததாகச் சொல்வது ஏன் ஒரு முட்டாள் தனமான கருத்து? இவ்வாறு சிலர் கருத்தைப் பரப்புவதற்கும், சிலர் அதை நம்பு வதற்கும் காரணம் என்ன? நித்தியமாக ஒரு தேவன் இருக்கிறார், அவர்தான் அனைத்தையும் சிருஷ்டித்தார் என்பதுதான் இப்பிரபஞ்சம் உண்டாக்கப்பட்டதற்கான பகுத்தறிவுமிக்க ஒரு காரணமாக இருக்கமுடியும். எவ்வாறு?*

3. *நித்திய வாழ்க்கையை பலிகொடுத்தாலும், இந்த உலகத்தில் விட்டுவிடக்கூடாது என்று நீங்கள் பட்டியலிட்டதை உங்கள் வகுப்பில் கலந்தாலோசியுங்கள். ஒவ்வொருவருடைய பட்டியல்களிலிருந்தும் என்ன கற்றுக்கொண்டீர்கள்? அப்படி எதையுமே எழுதமுடியவில்லை என்றால், நாம் இரட்சிக்கப்படாதபடி நம் வாழ்க்கையில் எதுவும் குறுக்கே நிற்காமல் இருக்க என்ன செய்யலாம்? ஆனால், அநேகர் பல விஷயங்களால் இழுப்புண்டு, தங்கள் இரட்சிப்பை விலை பேசுகிறார்கள்.*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. YOUTUBE க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. YOUTUBE க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,

ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*